www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# ஏறு தழுவுதல்

## வகுப்பு - 9 இயல் - 3



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# நுழையும் முன்

- வீரத்திற்கும் விளைச்சலுக்கும் செழிப்பிற்கும் செல்வத்திற்கும் தமிழர்களால் அடையாளப்படுத்தப்படுபவை மாடுகள்
- முல்லை மருத நிலங்களில் கால்கொண்டு தமிழ் அர்த்தம் வாழ்வோடு பின்னிப் பிணைந்து பண்பாடு ஆகியுள்ளது ஏறு தழுவுதல்
- ஏறு தழுவுதல் தமிழரின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு
- இளைஞர்களின் வீரத்தை பெருமிதப்படுத்தும் பண்பாட்டு நிகழ்வு
- இது நூற்றாண்டுகள் பல கடந்தும் தமிழர்த்தம் அடையாளமாகவே நிறுவப்பட்டு இருக்கிறது

www.Padasalai.Net

## கற்றல் விளைவுகள்

- தமிழர்களின் பண்பாட்டு அசைவுகளை உணர்ந்து பின்பற்றுதல்
- அறவுணர்வை வெளிப்படுத்தும் வீர விளையாட்டு என ஏறுதழுவுதல் ஏற்றல்

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

இலக்கியங்களில் ஏறு தழுவுதல்

- காளைகளின் பாய்ச்சல்

- எழுந்தது துகள்
- ஏற்றனர் மார்பு
- கவழ்ந்தன மருப்பு
- கலங்கினர் பலர் –
- --கலித்தொகை



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com



## கலித்தொகை

**ஓஒ! இவள், பொருபுகல் நல்ஏறு கொள்பவர் அல்லால்**
**திருமாமெய் தீண்டலர்**
**(கலித்தொகை-102 : 9-10)**

*(பொருபுகல் = போர் செய்வதில் விருப்பம் உடைய; ஏறு = காளை)*

போர் செய்யும் விருப்பம் உடைய நல்ல காளையை அடக்குபவரே அல்லாமல் வேறு யாரும் இவளது மெய் தீண்டத்தக்கவர் அல்லர் என்பது இதன் பொருள். ஆயர்குலப் பெண் ஏறு தழுவும் ஆடவனையே விரும்பி மணப்பாள் என்பதை இது உணர்த்துகிறது.



## கலித்தொகை

**கொல்லேற்றுக் கோடுஅஞ்சு வானை மறுமையும்**
**புல்லாளே ஆய மகள்**
**(கலித்தொகை- 103 : 63-64)**

*(கோடு = கொம்பு; புல்லாள் = தழுவ மாட்டாள்)*

காளையின் கொம்புக்கு அச்சம் கொள்பவனை ஆயர்மகள் அடுத்த பிறவியில் கூடக் கணவனாக ஏற்கமாட்டாள்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கலித்தொகை

நீறு எடுப்பவை, நிலம் சாடுபவை,
மாறு ஏற்றுச் சிலைப்பவை, மண்டிப் பாய்பவையாய்த்
துளங்கு இமில் நல் ஏற்று இனம் பல - களம் புகும்
மள்ளர் வனப்பு ஒத்தன.

அவ்வழியில் சில காளைகளும் சென்றன.
அவை காலால் புழுதியைக் கிளப்பின.
கொம்பால் மண்ணைக் குத்தின.
கத்தி எதிரொலி எழுப்பின.
ஒன்றோடொன்று மண்டிப் பாய்ந்துகொண்டன.
போர்க்களத்தில் மள்ளர் ஒருவரை ஒருவர்
தாக்கிக்கொள்வது போலத் தாக்கிக்கொண்டன.



www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## இலக்கியங்களில் ஏறு தழுவுதல்

- புறப்பொருள் வெண்பாமாலை, சிலப்பதிகாரம் - ஏறு கோள்
- சிற்றிலக்கியங்களில் பள்ளு இலக்கியத்தில்- எருது கட்டி
- (கண்ணுடையம்மன் பள்ளு)

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# தொல் சான்றுகள்

- **நடுகல் - சேலம்**

- கோவுரிச்சங்கண் கருவந்துறையில் எருது விளையாடி பட்டான் சங்கன் மகன் பெரிய பயலு நட்ட கல்லு



www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# தொல் சான்றுகள்

## கரிக்கையூர் பாறை ஓவியம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# தொல் சான்றுகள்

தேனி மாவட்டம் மயிலாடும்பாறை அருகே சித்திரக்கல் புடவு

- திமிலுடன் கூடிய பாறை ஓவியம்



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# சிந்துவெளி கல் முத்திரை

- சிந்துவெளி நாகரிக வரலாற்றிலும் காளை முக்கிய பங்கு வகிக்கிறது
- தெய்வமாக வழிபட்டுள்ளனர்
- மாடு தழுவும் கல் முத்திரை போன்று தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாக இருப்பதாக ஐராவதம் மகாதேவன் தெரிவித்துள்ளார்



www.Padasalai.Net

# பண்பாட்டு அடையாளம்

- **ஏறுதழுவுதல் பண்பாட்டின் அடையாளமாக நீட்சி அடைந்து பிணைந்தது**

- அடையாளம். - முல்லை நிலம்
- தொழில் உற்பத்தி - மருத நிலம்
- போக்குவரத்து தொழில் - பாலை நிலம்

www.Padasalai.Net

# ஏர் பூட்டி உழவு செய்ய உதவிய காளை மாடுகள்

- ஏர் மாடுகள்
- எருதுகள்
- ஏறுகள்
- என அழைக்கப்பட்டன

www.Padasalai.Net

# ஏறுதழுவுதல் வேறு பெயர்கள்

- மாடு பிடித்தல்
- மாடு அணைதல்
- மாடு விடுதல்
- மஞ்சுவிரட்டு
- வேலி மஞ்சுவிரட்டு
- எருது கட்டி
- காளை விரட்டு
- ஏறு விடுதல்
- சல்லிக்கட்டு




www.Padasalai.Net

# சல்லிக்கட்டு

- ஜல்லிக்கட்டு பேச்சு வழக்கில் திரிபுற்று ஜல்லிக்கட்டு என அழைக்கப்படுகிறது
- சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற வளையத்தினை குறிக்கும்
- புளியங்கொம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணிவிக்கும் வழக்கம் தற்போதும் உள்ளது
- அக்காலத்தில் புழங்கிக் கொண்டிருந்த சல்லி நாணயங்களை துணியில் முடிந்து மாட்டின் கொம்புகளில் கட்டி விடும் பழக்கமும் இருந்தது
- மாட்டைத் தழுவும் வீரருக்கு அந்த பண முடிப்பு சொந்தமாகும்




www.Padasalai.Net

ஏறுதழுவுதலும்

# தமிழர் அறமும்

- மேலை நாடுகளில் குறிப்பாக தேசிய விளையாட்டாக காளை சண்டையைக் கொண்டிருக்கும் ஸ்பெயின் நாட்டில் காளையை கொன்று அடக்குபவனே வீரனாக கருதப்படுவான்



மேலை நாட்டுக் காளை விளையாட்டு

www.Padasalai.Net

மேலை நாடுகளில் ஆண்டு முழுவதும் நடத்தப்படும்
காளை விளையாட்டு மனிதனுக்குள் ஒளிந்திருக்கும்
வன்மத்தையும் போர்வெறியையும்
வெளிப்படுத்துவது போல் இருக்கிறது





www.Padasalai.Net

# தமிழகத்தில் நடைபெறும் ஏறு தழுவுதல்

- எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தக் கூடாது நிகழ்வின் தொடக்கத்திலும் முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வார். எவராலும் அடக்க முடியாத காளைகளும் உண்டு காளைகளும் வெற்றி பெற்றதாக கருதப்படும் அன்பையும் வீரத்தையும் ஒரு சேர வளர்த்தெடுக்கும் விளையாட்டு காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராக கருதப்படுவர்



www.Padasalai.Net

# நம் கடமை

- **தமிழர்களின் பண்பாட்டு திருவிழாவாக விளங்கும் ஏறுதழுவுதல் 2000 ஆண்டுகால தொன்மையுடையது**

- பண்டைய வீர உணர்வை நினைவூட்டும் ஏறுதழுவுதல் விலங்குகளை முன்னிலைப்படுத்தும் வழிபாட்டையும் இயற்கை வேளாண்மையையும் வலியுறுத்தும் பண்பாட்டு குறியீடு ஆகும்
- இப்பண்பாட்டுக் கூறுகளை பேணி காப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்

www.Padasalai.Net

# நன்றி

- புகழேந்தி புலவர் அரசு மேல்நிலைப்பள்ளி
- பொன் விளைந்த களத்தூர்
- செங்கல்பட்டு

www.Padasalai.Net